# திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**12.10.2018ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்–**

**முன்னிலை : திருமதி. எஸ். பாரிஜாதம், பி.பார்ம்., எம்.பி.ஏ., அவர்கள்**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், திருவண்ணாமலை நகராட்சி.**

**பொருட்கள்**

**குறள் : –**
**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**1. நாட்குறிப்புகள்:**
(அ) நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் மற்றும் அக்டோபர் – 2018 மாதக்குறிப்பு
(ஆ) நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் மற்றும் அக்டோபர் – 2018 மாதக்குறிப்பு
**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவுசெய்யலாம்.
**தீர்மானம்**

**2.** அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:19/07/2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MV.IV) துறை நாள்:26/07/2018 ஆகியவற்றில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 01/04/2018-ம் முதல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. மேற்க்கண்ட அரசாணையைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20/08/2018-ல் சொத்துவரி பொதுசீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள், சுற்றறிக்கையில குறிப்பிட்டுள்ள அதிகாரங்கள் ஆகியவற்றிகளின்படி திருவண்ணாமலை நகராட்சியில் 01/04/2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்படஉள்ளது.

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76-ன்படி சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய விவரங்களின் பட்டியல்:

| **வ.எண்** | **கட்டிடப் பயன்பாடு விபரம்** | **01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம்** |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகைகுடியிருப்புகள்) | 50% சதவீதத்திற்குமிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100% சதவீதத்திற்குமிகாமல் |

திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதன் அடிப்படையில் சொத்துவரி பொதுசீராய்வு செய்யவும் மேற்கண்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியிலுள்ள 455 சாலைகள்/தெருக்கள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**A,B,C என வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்களின் விபரங்கள்**

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | A | 278 |
| 2 | B | 162 |
| 3 | C | 15 |
| மொத்தம் | | 455 |

அரசாணை (நிலை) எண்.73 மற்றும் 76; நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/R1, நாள்:20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01/04/2018-ம் தேதி முதல் திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்துவரி பொதுசீராய்வு செய்திடவும், திருவண்ணாமலை நகராட்சி பகுதியிலுள்ள தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தியும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்தும் திருவண்ணாமலை நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 1034 நாள்:10/09/2018-ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு |
| A | 2.00 | 3.30 |
| B | 1.50 | 2.50 |
| C | 1.00 | 1.60 |

மேலும், திருவண்ணாமலை நகராட்சியில் உள்ள 455 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி, அம்மண்டலங்களுக்கான அடிப்படைமதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை 11.9.2018-ம் தேதிய தினமலர் நாளிதழில் வெளியிட்டும், திருவண்ணாமலை நகராட்சி அலுவலக விளம்பரபலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தியும், நகராட்சி வலைதளத்தில் வெளியிட்டும், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருந்தால் பொதுமக்கள் ஆணையருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் தெரிவிக்க அறிவிக்கப்பட்டது. அறிவிப்புகள் வெளியிடப்பட்டு 30 தினங்கள் 10.10.2018 அன்று முடிவடைந்துள்ள நிலையில் கீழ்கண்ட இரண்டு மனுதாரர்களிடமிருந்து ஆலாசனைகள் வரப்பெற்றுள்ளன

1.சு.வாசுதேவன்
290/61பி/-1A, செங்கம் சாலை-1
ஸ்ரீரமணாஸ்ரமம் அஞ்சல்
திருவண்ணாமலை

2.தலைவர் மற்றும் குடியிருப்போர்,
ROA நகர் குடியிருப்போர் நலச்சங்கம்
61c2/297, செங்கம் ரோடு-1
திருவண்ணாமலை.

மேற்கண்ட மனுதாரர்கள் A மண்டலத்திற்கு ஆட்சேபணை தெரிவித்துள்ள பகுதி, பாண்டிச்சேரி - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள 20 ஆண்டுகளுக்கு முன்பு அங்கீகரிக்கப்பட்ட மிகவும் வளர்ச்சியடைந்த மனைப்பிரிவு பகுதிகளாகும். மேற்படி பகுதி ஏற்கனவே A மண்டலத்திலேயே அமைந்துள்ளது. தற்பொழுது மண்டலம் மாற்றம் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர்களின் கோரிக்கையினை ஏற்க இயலாது.

ஆதலால் திருவண்ணாமலை நகராட்சியில் உள்ள 455 தெருக்கள்/சாலைகள் A,B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் மன்றத் தீர்மானம் எண்: 1034 நாள்:10.09.2018ன்படி அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்துள்ளதை இறுதி செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. A மண்டலத்திற்கு ஆட்சேபணை தெரிவித்துள்ள பகுதி, பாண்டிச்சேரி - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள 20 ஆண்டுகளுக்கு முன்பு அங்கீகரிக்கப்பட்ட மிகவும் வளர்ச்சியடைந்த மனைப்பிரிவு பகுதிகளாகும். மேற்படி பகுதி ஏற்கனவே A மண்டலத்திலேயே அமைந்துள்ளது. தற்பொழுது மண்டலம் மாற்றம் செய்யப்படவில்லை. எனவே மனுமாரர்களின் கோரிக்கையினை ஏற்க இயலாது.

2. மேலே குறிப்பிட்டுள்ள அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018-ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சதவீதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% சதவீதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட திருவண்ணாமலை நகராட்சி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. திருவண்ணாமலை நகராட்சியில் உள்ள 455 தெருக்கள/சாலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளபட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து மன்றம் அங்கீகரிக்கலாம்.

4. அ) மண்டலம் A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.2.00**லிருந்து **ரூ.3.30** ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

   ஆ)மண்டலம் B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள தெருக்கள் மற்றும் சாலைகளுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.1.50**லிருந்து **ரூ.2.50** ஆக உயர்வு செய்யப்பட்டதை மன்றம் உறுதி செய்து அனுமதி வழங்கலாம்.

   இ) மண்டலம் C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்கள் அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு **ரூ.1.00** லிருந்து **ரூ.1.60** ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

5. இம்மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்படும் நாளிலிருந்து திருவண்ணாமலை நகராட்சியில் புதிய சொத்து வரி நிர்ணயம் செய்யப்படும் அல்லது சொத்துவரி திருத்தியமைக்கப்படும் அனைத்து வகையானக் கட்டடங்களுக்கும் இந்நகரமன்றத் தீர்மானத்தில் வகைபடுத்தப் பட்டுள்ளபடி மண்டலங்கள் மற்றும் அவற்றிற்கான அடிப்படை மதிப்பு எடுத்துக் கொள்ளப்பட்டு சொத்து வரி விதிப்பு செய்யவும் இம்மன்றம் இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம்**

**3.** இந்நகராட்சி வார்டு எண். 01 முதல் 39 வரை உள்ள பகுதியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை M/s. HI – Tech Tronices, Chennai நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தம் நீட்டிப்பு காலம் நகர மன்ற தீர்மான எண். 208 நாள் 31.07.2017ன்படி பிப்ரவரி – 2018 உடன் முடிவடைந்து 01.04.2018 முதல் துறையின் மூலம் மேற்படி பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படுகிறது. விடுப்பட்ட மார்ச் – 2018 மாதத்தில் M/s. Hi-Tech Tronices சென்னை நிறுவனம் மேற்படி பணிகளை மேற்கொண்டமைக்கு ரூ.5,33,989/– வழங்குமாறு கோரியுள்ளார் இதன்படி மேற்படி நிறுவனம் மார்ச்–2018 மாதத்தில் தெருவிளக்குகள்பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை மேற்கொண்டமைக்கு ரூ.533989/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**4.** இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் புதுவாணியங்குளம் 3வது தெருவில் அமைய இருந்த நுண்ணிய 4 உரக்கலன் மாற்றம் செய்யப்பட்டு அருகில் உள்ள பச்சையம்மன் கோயில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் அருகில் உள்ள இடத்தில் நுண்ணிய உரக்கலன் அமைத்து (Micro Compost Centre) அப்பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை சேகரித்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக தொட்டிகள் கட்டுதல் மற்றும் குப்பைகள் பிரித் தெடுக்கும் தளம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.50 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**5.** இந்நகராட்சி வார்டு எண். 26 செங்கம் ரோடு மாட்டு சந்தை மைதானம் எதிரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் கீழ் அப்பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை பயன்படுத்தி உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக தொட்டிகள் கட்டுதல் (நுண்ணிய உரக்கலன்) அமைத்தல் மற்றும் நான்கு புறங்களிலும் சுவர்கள் கட்டுதல் அறைகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள முதற்கட்டமாக ஆகும் தோராய செலவினம் ரூ.25.00 லட்சம் (ரூபாய் இருபத்து ஐந்து லட்சம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

ந.க.எண். 4900 / 2018/இ1

**தீர்மானம்**

**6.** இந்நகராட்சி சோமாவரகுளம் நீரேற்று நிலையத்தில் உள்ள சுற்றுச் சுவர் பழுதான நிலையில் உள்ளதால் பாதுகாப்பு நலன் கருதி இதனை அகற்றிவிட்டு புதியதாக சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் நுண்ணிய உரக்கலன் (Micro Compost Center) அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 4.75 லட்சம் (நான்கு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**7.** இந்நகராட்சி வார்டு எண். 18 பெருமாள் நகர் பகுதியில் உள்ள மண் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் பொது மக்களின் நலன் கருதி சிமெண்ட் சாலையாக அமைக்க தோராய செலவினம் ரூ.1.06 லட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து ஆறாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**8.** இந்நகராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் நுண்ணிய உரக்கலன் (Micro Compost Center) அமைத்து அப்பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை கொண்டு உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள 9 எண்கள் தொட்டிகள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டது. தற்போது கூடுதலாக வடக்கு பகுதியில் 9 எண்கள் தொட்டிகள் கட்டுதல் மற்றும் தரை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.3.65 லட்சம் (மூன்று லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**9.** இந்நகராட்சியில் உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் தினசரி குடிநீர் தூய்மைப்படுத்த பயன்படுத்தப்படும் FERRIC ALUM இருப்பு குறைவாக உள்ளதால் தற்போது மூன்று மாதத்திற்கு தேவையான ஆலம் 20.00 MT வாங்கிக் கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4.09 லட்சம் (ரூபாய் நான்கு லட்சத்து ஒன்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**10.** இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 01 மத்திய பேருந்து நிலையத்தில் அமைய இருந்த நுண்ணிய உரக்கலன் மாற்றம் செய்யப்பட்டு அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் அருகில் உள்ள இடத்தில் நுண்ணிய உரக்கலன் அமைத்து (Micro Compost Center) அப்பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை சேகரித்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள சேகரித்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக தொட்டிகள் கட்டுதல் குப்பைகள் பிரித்தெடுக்கும் தளம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.50 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**11.** இந்நகராட்சி பொதுப்பிரிவின் அனைத்து பிரிவு எழுத்தர்களும் அன்றாட பணிகளை தணினியின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது உள்ள **UPS Battery** பழுதாகி உள்ளதால் மின்தடை ஏற்படும் நிலையில் கணினி **OFF** ஆகிவிடுவதால் தட்டச்சு செய்யப்படும் கோப்புகள் அழிந்து விடுகிறது. எனவே மின் தடை ஏற்படும் நிலையில் தொடர்ந்து கணினிகள் பயன்படுத்த ஏதுவாக 12V150AH Tupler Battery 8 எண்கள் வாங்கிக்க கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1,25,800/– (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து எண்ணூறு)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**12.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள குப்பை அள்ளப்பயன்படுத்தப்படும் குப்பை தொட்டியில் Whell பழுதாகி உள்ளதால் குப்பைகளை எடுக்க சிரமம் ஏற்படுவதால் பழுதான Whell களை மாற்றி புதியதாக 150 எண்கள் வாங்கிக் கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 லட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

ந.க.எண். 4857/2018/இ1

**தீர்மானம்**

**13.** திருவண்ணாமலை நகராட்சியின் வேட்டவலம் சாலை மற்றும் திருக்கோவிலுர் சாலையில் உள்ள வாம்பே கழிப்பிடத்தினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளும் பணிக்கு 14.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.மாரிமுத்து<br>கல்லரப்பாடி கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | 2.75 | 0.07 % குறைவு |
| 2 | திரு.எம்.கமலக்கண்ணன்<br>அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை. | | 0.87 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.ஆர்.மாரிமுத்து, திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**14.** இந்நகராட்சிப் பகுதியில் பொதுப் பணித்துறை அலுவலகம் சண்முகாப் பள்ளி செங்கம் ரோடு குடியிருப்பு பகுதி ALC பள்ளி ALC குடியிருப்பு தாமரை நகர் உழவர் சந்தை தாமரை நகர் குடியிருப்பு பகுதி துப்புரவு பணியாளர் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் இயற்கை உரம் தயாரிக்க தொட்டி கட்டும் பணிக்கு 30.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.எம். கமலக்கண்ணன்<br>அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை | **4.00** | 0.06 % குறைவு |
| 2 | திரு.எ. சத்தியராஜ்<br>3/504 குளத்துமேட்டுத் தெரு<br>சிறுவள்ளுவர் கிராமம் (ம) அஞ்சல்<br>திருவண்ணாமலை | | 0.77 % அதிகம் |

## அலுவலகக்குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.எம்.கமலக்கண்ணன், திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**15.** இந்நகராட்சியின் கல் நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளும் பணிக்கு 19.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திருமதி.பி.ராஜேஸ்வரி<br>40, சோமவாரக்குளத் தெரு 2<br>திருவண்ணாமலை | 2.50 | **0.14** % குறைவு |
| 2 | திரு.எம்.கமலக்கண்ணன்<br>அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை. | | 0.78 % அதிகம் |

## அலுவலகக்குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திருமதி.பி.ராஜேஸ்வரி, திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**16.** இந்நகராட்சியில் திருவிழாக்காலங்களில் வருகை புரியும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக, நகரின் முக்கிய இடங்களில் ஆங்காங்கே குப்பைத் தொட்டிகள் அமைக்க பசுமை வலை (Garden Shading Net) சப்ளை செய்யும் பணிக்கு 24.04.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சம்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.கே.சிவாஜி<br>மாந்தோப்பு தெரு,<br>திருவண்ணாமலை. | 0.49 | ஒரு ரோல்<br>ரூ.3870/- |
| 2 | திரு.எம்.கமலக்கண்ணன்<br>26/38, அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை. | | ஒரு ரோல்<br>ரூ.3950/- |
| 3 | திரு.ஆர்.மாரிமுத்து,<br>கல்லரப்பாடி கிராமம்,<br>செங்கம் தாலுக்கா - 606702. | | ஒரு ரோல்<br>ரூ.4030/- |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.சிவாஜி, திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**17.** இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள குப்பை தொட்டிகளுக்கு புதியதாக Dnst Bin Rotating Whell – 150 எண்கள் சப்ளை செய்ய 28.04.2018ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | மொத்த செலவினம் |
|---|---|---|---|
| 1. | Tamil Nadu Chemicals Industries<br>No. 02, Thirumullivoyal . Chennai –62 | 1.50 | ரூ. 159560/– |
| 2. | Shree Sai Industries<br>No.38, Thirumullai Nagar<br>Chennai / 62 | | ரூ. 142800/– |
| 3. | Sruthi um Industry<br>No. 488 Ambattur, Chennai - 53 | | ரூ. 155200/– |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.02ல் கொடுத்துள்ள M/s. Shree Sai Industries, சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதாக அனுமதிக்கலாம்.

**ந.எண்.4857/2018/இ1**

**தீர்மானம்**

**18.** இந்நகராட்சியின், திருக்கோவிலுர் சாலை நகராட்சி தொடக்கப்பள்ளியினை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளும் பணிக்கு 31.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.வி.என்.பிரகாஷ்<br>26/38, கரிகாலன் தெரு<br>திருவண்ணாமலை. | 2.40 | 0.10 % குறைவு |
| 2 | திரு.எம்.கமலக்கண்ணன்<br>அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை. | | 0.74 % அதிகம் |

## அலுவலகக்குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.வி.என்.பிரகாஷ், திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

## தீர்மானம்

**19 .** இந்நகராட்சி உலகலாப்பாடி தலைமை நீரேற்று நிலையத்தில் தினசரி குடிநீர் தூய்மை செய்யும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் ஆலம் சப்ளை செய்ய 20.09.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | மொத்த செலவினம் |
|---|---|---|---|
| 1. | Tamil Nadu Chemicals Industries<br>No. 02, Thirumullivoyal . Chennai –62 | **4.09** | ரூ. 18.00<br>(1 கிலோ விலை GST உட்பட) |
| 2. | Shree Sai Industries<br>No.38, Thirumullai Nagar<br>Chennai / 62 | | ரூ. 20.44<br>(1 கிலோ விலை GST உட்பட) |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.01ல் கொடுத்துள்ள M/s. Tamil Nadu Chemicals சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
**ந.எண்.1596/2018/இ1**

## தீர்மானம்

**20.** இந்நகராட்சி பொதுப்பிரிவில் மின் தடைகள் ஏற்படும் நிலையில் தொடர்ந்து கணினிகள் பயன்படுத்த ஏதுவாக 12V150 AH Tupler Battery 8 எண்கள் சப்ளை செய்ய 13.08.2018ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | மொத்த செலவினம் |
|---|---|---|---|
| 1. | Jawhar Battery Sales & service centre<br>11/1 Vanakara street, Tirvuannamalai | **1.52** | ரூ. 152800/–<br>( GST உட்பட) |
| 2. | Valavan Battery<br>32 H /G1 By pass road, Tiruvannamalai | | ரூ. 156000/–<br>( GST உட்பட) |
| 3. | Moorthy Battery House<br>5/6 போளூர் ரோடு, திருவண்ணாமலை | | ரூ. 155200/–<br>( GST உட்பட) |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கொடுத்துள்ள M/s.Jawhar Battery திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**21.** இந்நகராட்சியின் வார்டு எண்.17ல் தர்மலிங்கம் பூங்காவினை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 29.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.என்.ஆறுமுகம்<br>11, அம்மணி அம்மன் நகர், கீழ்நாத்துர், திருவண்ணாமலை. | 9.75 | 0.09 % குறைவு |
| 2 | திரு.ஆர்.மாரிமுத்து<br>கல்லரைப்பாடி, திருவண்ணாமலை. | | 0.12 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.என்.ஆறுமுகம், திருவண்ணாமலை என்ற நிறுவனத்தின் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**22.** இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்காக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட 980 பயனாளிகளின் விவரங்களை கணினியில் பதிவேற்றம் செய்ய அதற்கு ஆகும் தோராய செலவின ரூ. 10000/– DTP சென்டர் திருவண்ணாமலை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டது. எனவே செலவு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுவதுடன் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4364 / 2018/ எச்1

**தீர்மானம்**

**23.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு TATA ACE அவற்றிற்கு (Road Tax) சாலைவரி ரூ. 153384/– க்கு பில் பெறப்பட்டது. அதற்கு தோராய செலவு ரூ.135000/– மன்ற அனுமதி பெறப்பட்டது. எனவே கூடுதல் செலவினம் ரூ. 18384/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுவதுடன், ஆணையரின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 3880 / 2018/ எச்1

**தீர்மானம்**

**24.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு – பொது மக்களின் நலன் கருதியும், எதிர்வரும் மழைக்காலங்களை கருத்தில் கொண்டும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்க, நில வேம்பு குடிநீர் பவுடர் – 600 கிலோ வாங்க அதற்கும் ஆகும் தோராய செலவு ரூ. 900000/–க்கு (ஒன்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 3522/ 2018/ எச்1

**தீர்மானம்**

**25.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு – சித்த மருத்துவமனை பணியாளர்கள் (1) எஸ்.ரூபகுமாரி (2) எஸ். கோகிலா அவர்கள் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக நகராட்சி பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கியதால் அவற்றிற்கு செலவினத் தொகையாக ரூ.6060/– க்கு (ரூபாய் ஆறாயிரத்து அறுபது மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 4285/ 2018/ எச்1

**தீர்மானம்**

**26.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மணலூர்பேட்டை சாலையில் உள்ள ஈத்கா (இடுகாடு ) அருகில் புதிய 3 மின் கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்த இளநிலை பொறியாளர் தாமரை நகர் பிரிவு தமிழ்நாடு மின்சார வாரியம் திருவண்ணாமலை அவர்களிடமிருந்து கேட்பு வரப் பெற்றுள்ளது தொகை ரூ.42110/–க்கு SE TANGEDCO. Tiruvannamalai அவர்களுக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினம் வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றுத் தொகை செலுத்துவதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண். 624/ 2015/ இ2

**தீர்மானம்**

**27.** திருவண்ணாமலை நகராட்சி 2016–17 ம் ஆண்டு தணிக்கை தடை பத்திகள் வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி ஆகிய நிதிகள் தணிக்கை பத்திகள் ஜெராக்ஸ் மற்றும் புக் பைண்டிங் செய்யப்பட்ட தொகை ரூ. 8950/– உடனிகழ் தணிக்கை பிரிவிற்கு மற்றும் 2017–18ம் ஆண்டு கணக்கு முடிக்க கேட்பு, வசூல் நிலுவை புக் பதிவேடு பைண்டிங் செய்யப்பட்ட தொகை ரூ.3150/–ம் சேர்த்து வழங்க அவசர அவசியம் கருதி பைண்டிங் செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**28.** இந்நகராட்சியின் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து இடையில் நின்றுவிட்ட திரு.சி.விஜயபாலன் என்பவரால் தொழிலாளர் நிதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.ID No.72/2014 ன் தீர்ப்பின் படி ரூ. 12.00 லட்சம் தொகையும் Sec. 17B ன்படி தனியருக்கு மாதச் சம்பளம் வழங்கப்படுவதையும் எதிர்த்து சென்னை உயர்நிதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட வழக்கு WA 1345 & 1346 OF 2017லும் வைப்புத் தொகையாக ரூ. 4.00 லட்சம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. இதன்படி தொழிலாளர் நிதி மன்றத்தில் 20.07.2018 அன்று செலுத்துப்பட்டது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 04.10.2018ல் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் உடனடியாக உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர அனுமதி வழங்கியுள்ளார். இதன்படி மேற்படி வழக்கு நடத்த உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் திரு.B.Vinodh Kanna, Advocate New Delhi அவர்களுக்கு வழக்காடு கட்டணம் ரூ.40,000/–ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**29.** திருவண்ணாமலை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட 39 வார்டுகளிலும் உள்ள சொத்து வரி சீராய்வு 01.04.2018 முதல் குடியிருப்பு கட்டிடங்கள் வணிக கட்டிடங்களுக்கு வரி உயர்வு செய்ய அரசாணை எண். 73 மற்றும் அரசாணை எண். 76ன்படி சொத்துவரி மாஸ்டர் பதிவேடுகள் சுயமதிப்பீட்டு படிவம் மற்றும் கணக்கிட்டு படிவங்கள் கூட்டுறவு அச்சகத்திடம் பிரிண்டிங் மற்றும் பெயிண்டிங் விளம்பரம் செய்ய ஆகும் செலவு தோராயமாக ரூ.180000/– வழங்க மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–** அவசியம் அவசரம் கருதி ரெப்கோ பிரிண்ட்க்கு பிரிண்டிங் மற்றும் பெயிண்டிங் செய்ய உத்திரவு வழங்கப்பட்டதையும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

**30.** இந்நகராட்சியின் பொது மக்களுக்காக பயன்படுத்தப்படும் சித்த மருத்துவமனைகளுக்கு (1)கீழ்நாத்தூர் சித்த மருத்துவமனை (2) கனகராயர் தெரு சித்த மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வாங்க 2018–19 ஆண்டிற்கு ரூ.300000/– க்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிறுவனம் – IMPCOPS @ data one .in

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 3083/2018/எச்1

**தீர்மானம்**

**31.** இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும், வாகனங்களுக்கு குப்பைகளை ஏற்றிச் செல்லும் போது குப்பைகள் காற்றில் பரவாமல் இருக்க, பொது மக்களின் நலன் கருதியும் அதனை வெளியேராமல் தடுக்க வலைகள் வாங்க ரூ. 380000/– (மூன்று லட்சத்து என்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வைக்கப்பட்டது. மேலும் பணி முடிக்கப்பட்டு கூடுதலாக ரூ.16000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 3675/2018/எச்1

**தீர்மானம்**

**32.** இந்நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் தற்போது டெங்கு காயச்சலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் இப்பணியினை மேலும் தூரிதப்படுத்தவும் இப்பணியினை தொடர்ந்து செய்து வரும் சுமார் 75 டெங்கு ஒழிப்பு தற்காலிக பணியாளர்களுக்கு பகுதி நேரமாக ஒரு நபருக்கு 150/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இப்பணியினை சுமார் 8 மணி நேரமாக பணிபுரிந்திடவும், இதற்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிக்கப்பட்ட ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 150/– என்ற வழங்கிடவும் இவ்வாறான பணிக்கு மேலும் 30 நபர்கள் பணியமர்த்திக் கொள்ளவும் மொத்தம் 105 நபர்கள் ரூ. 150X105 நபர் X 30 நாள் ஆக மொத்தம் 4,72,500/– க்கு இப்பணியினை 6 மாதம் வரையிலான காலங்களுக்கு மொத்தம் ரூ.2835000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2692/2016/எச்1

**தீர்மானம்**

**33.** இந்நகராட்சியில் சத்துணவு மையங்களில் உபயோகப்படுத்தப்பட்டு தற்போது 3764 காலி கோணிப்பைகள் ஆணையாளர் உத்தரவின்படி 19.09.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நல்லபை 50Kg | கீழிந்தவை 50 kg | மிகவும் கிழிந்த பை 50kg |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலமுருகன் ஸ்டோர்ஸ் | 6.00 | 5.00 | 3.50 |
| 2 | ஸ்ரீ விநாயகா கன்னி ஸ்டோர்ஸ் | 5.00 | 4.00 | 3.00 |
| 3. | ஸ்ரீ சக்தி மாரியம்மன் ஸ்டோர்ஸ் | 5.00 | 4.00 | 3.50 |

**அலுவலகக் குறிப்பு –**

1. அதிக விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ பால முருகன், ஸ்டோர்ஸ், வேலூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிட மன்ற ஏற்கலாம்.

**தீர்மானம்**

**34.** திருவண்ணாமலை நகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4, பிளாக் எண்.35 நகரளவு எண். 1877/1எ,1871/1பி, 1887/2எ,1887/2பி பரப்பு 2.82 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்து கொள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.436/2018/வேம3, நாள்.13.06.2018.ல் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடம் மற்றும் சாலைகள் போன்றவை தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அங்கீகரித்தின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குர், வேலூர் அவர்களால் அளிக்கப்பட்ட வரைபடத்தின் படி நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ள நிலத்தின் உரிமையாளர் திரு. சீனிவாசன் (ம) இருவர் அவர்களின் கடிதம் நாள்.25.06.2018 ,31.07.2018 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு –</u>**

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அடங்கிய ந.க.எண்.436/2018/வேம3, நாள்.13.06.2018 கடிதம் பதிவு செய்யலாம்.

2. மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளில் நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் நடைபெற்ற சாலை, கல்வெட் பணிகள், குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி, மழைநீர் வடிகால்வாய், பூங்கா முள்வேலி அமைக்கும் பணி, போன்றவைகள் முடிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் நில உரிமையாளர்களின் செலவிலேயே செய்து முடிக்கப்பட்டுள்ளது.

3. இம்மனைப்பிரிவில் அமையும் சாலை எண் 1. 30' x 255'= 7657.5 ச.அடி சாலை எண். 2 30' x 378'00= 11340 ச.அடி சாலை எண்.3. 23' x 260' 6'= 5991.5 ச.அடி சாலை எண்.4. 23'x 263'9" = 6066.25 ச.அடி மற்றும் சாலை முடக்கம் 23 அடி சாலைகள் (4 x 5 x 5 x ½) =50 சாலை முடக்கம் 30'அடி சாலைகள் (2 x 5 x 5 x ½) =25 ச.அடி ஆக மொத்தம் 31130.25 ச.அடி நிலம் சாலைக்காகவும் மற்றும் பூங்கா 1 58888.05 (சர்வே எண்.1871/1எ மற்றும் 1871/1பி 30 அடி சாலை ஒட்டி) சாலை எண்.2 பூங்கா 2. 3423.60 (சர்வே எண்.1887/2பி, 23 அடி சாலை சாலை எண்.4 ஐ ஒட்டி) ஆக மொத்தம் 9311.65 ச.அடி பரப்பளவு உள்ள பூங்கா இடம் ஆகியவைகள் நகராட்சி ஆணையர் பெயரில் தானமாக பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

4. அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கால்வாய், கல்வெட் சாலைகள், குடிநீர் பகிர்மான குழாய் மனுதாரர் தரப்பில் செய்துள்ளதனையும், மின்கம்பம் அமைக்க மின்வாரியத்திற்கு ரூ.1,62,680/–ம் மற்றும் தெருவிளக்கு அமைக்க ரூ.33,000/– மனைப்பிரிவு கூராய்வுகட்டணம் மற்றும் நிலங்களை பிரிப்பதற்கான கட்டணம் ரூ.30,000/–செலுத்தியுள்ளதன் பேரில் மேல்நடவடிக்கைக்கு நகர் ஊரமைப்பு துறைக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3090/2018/எப்1**

**தீர்மானம்**

**35.** இந்நகராட்சியில் திருவிழா காலங்களில் வருகை புரியும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக நகரின் முக்கிய இடங்களில் குப்பை தொட்டிகள் அமைக்கப்பட்டு குப்பைகள் மேல் பாதுகாப்பு பசுமை வலை (நெட்) அமைக்குமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களின் கள ஆய்வில் தெரிவிக்கப்பட்டு இதன்படி மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.49000/– (நாற்பத்து ஒன்பதாயிரம் )க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் அனுமதிக்கலாம்

**தீர்மானம்**

**36.** இந்நகராட்சியின் வார்டு எண்.36ல் உள்ள புதிய நகராட்சி அலுவலகத்திற்கு சுற்றுசுவர் கட்டும் பணிக்கு 29.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | G.V.Construction<br>பைபாஸ் சாலை, திருவண்ணாமலை. | 10.00 | 0.10 % குறைவு |
| 2 | திரு.என்.தேவபிரபு<br>121,பைபாஸ்சாலை,திருவண்ணாமலை. | | 0.55 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள G.V.Construction, திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**37.** இந்நகராட்சி வார்டு எண் – 24 செங்கம் ரோடு அம்மா உணவகம் சுற்றியுள்ள சுற்றுச் சுவரின் ஒரு பகுதி பழுதடைந்து உள்ளதால் உணவகத்தில் உள்ள பொருட்கள் காணாமல் போவதாலும் மேலும் சமையல் செய்ய பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சேதப்படுத்தப் படுவதாலும் பாதுகாப்பு நலன் கருதி பழுதடைந்த சுற்றுச்சுவர் புதியதாக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும். தோராய செலவினம் ரூ. 2.50 லட்சம் (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

